V12T www.Padasalai.Net www.CBSEtips.in

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

காலாண்டு பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் பொதுத் தமிழ் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14×1=14

1) **கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடர் அமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.

**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) இரண்டு கருத்தும் சரி

இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) கருத்து 2 சரி

2) **பொருத்துக.**

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 4, 1, 3 இ) 2, 3, 4, 1 ஈ) 1, 4, 2, 3

3) மாறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல்

இ) அலையும் சுவடும் ஈ) பூஜ்ஜியங்களின் சங்கிலி

4) 'இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ:

படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே' - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்

அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு

இ) நன்னூல் ஈ) நற்றிணை

5) தமிழில் திணைப்பாகுபாடு .............. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

6) **'பொய்யா வானம்'** புதுப்பெயல் பொழிந்தன - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ) இடைச் சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

7) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல் ஆ) பாறைகள் இல்லாமை

இ) மணல் அள்ளுதல் ஈ) பருவநிலை மாற்றம்

8) **கருத்து 1 :** மஸ்னவி என்பது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக் கவிதைகளின் தொகுப்பு

**கருத்து 2 :** ஜலாலுதீன் ரூமி இந்தியாவின் மிகச்சிறந்த கவிஞர்களுள் ஒருவர்.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) கருத்து 1 தவறு, 2 சரி

9) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம்

இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

10) 'எங்கள் தந்தையர் நாடு என்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தந்தைவழிச் சமூக முறை ஆ) தாய்வழிச் சமூக முறை

இ) விரிந்த குடும்பம் முறை ஈ) தனிக்குடும்ப முறை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11) 'மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புக... வளர்ந்தாய்' - இவ்வடிகள் பயின்று வரும் நூல் எது?

அ) சிந்தாமணி ஆ) கொன்றை வேந்தன்

இ) தமிழ்விடு தூது ஈ) நல்வழி

12) சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

13) 'குழிமாற்று' எந்த துறையோடு தொடர்புடைய சொல்

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

14) 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு

இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3×2=6**

16) நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது விளக்கம் தருக.

17) 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்

ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

18) 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?

19) 'தர்மமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே' - தொடருக்குப் பதிவுரை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

20) நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

21) சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

22) சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

23) **உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ) தாமரை இலை நீர் போல ஆ) எலியும் பூனையும் போல

24) **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) விம்முகின்ற ஆ) வைத்து

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) இனநிரை ஆ) அருங்கானம்

26) **பொருள் உணர்ந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

விலை, விளை, விழை

27) **கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

அ) Metro Train ஆ) Passport

28) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

29) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

30) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.

வெங்காயம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

31) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

32) 'நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

33) குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

34) 'நெல்லின் நேரே வெண்கல உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

35) இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

36) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

37) மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

39) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

40) ஏகதேச உருவக அணி

**(அல்லது)**

நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

41) **கீழ்க்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

- கவிமணி தேசிக விநாயகம்

42) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

**(அல்லது)**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

43) **தமிழாக்கம் தருக.**

In terms of human development objectives. Education is an end in itself, not just a means to on end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

44) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.

## பகுதி - IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. **3×6=18**

45) அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

46) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பில் இருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

47) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

48) அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4+2=6**

அ) 'துன்பு உளது' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'நன்று' - என முடியும் குறள்

\- - - - - - -

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com